ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2455/26 - 2025 සැප්තැම්බර් මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.09.25

2455/26 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: ஹல்/3/2/1/28.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல.:
03ஜே/92/எப்ஆர்/65.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் ஹல்தும்முல்ல பிரதேச செயலாளர் பிரிவில் கந்தபல்ல கோரளை எனும் சிறு பிரிவில், கொலொன்கஸ் தென்ன (154 A) கிராம அலுவலர் பிரிவில் தியமிகொல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் கடத்திரல் இலக்கம் 46 இல் துணை கடத்திரல் இலக்கம் 07 மற்றும் 2024.02.03 ஆந் திகதியுடைய கடத்திரல் வரைபடத்தில் துண்டு இல. 1AF எனக் குறிப்பிடப்பட்டுள்ள முழு விஸ்தீரணம் 8.1300 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள காணியின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 1AF - காணியின் பெயர்: ஈரியகெட்டியகெலே; விபரம்: காடு; உரிமை கோருபவர்: இலக்கம் 404, மொரட்டுவ ரஜமல்வத்தையில் வதியும் திரு. அமரசிங்க ஆரச்சிகே தொன் ஹேமபால அமரசிங்க அவர்கள்; விஸ்தீரணம்: 8.1300 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 1AG, 21, 1AE, 23, 25 1/2 மற்றும் 25; கிழக்கு: 21,1AE,23,25 1/2, 25 மற்றும் 1; தெற்கு: துண்டு இல. 1; மேற்கு; துண்டு இல. 1AG.

நோக்கம்: வன நிலப் பாதுகாப்பிற்காக ஈரிய கெட்டிய காடு எடுக்கப்படுகிறது.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹல்தும்முல்ல பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. ஏ. ஜே. பிரியங்கிகா,
பிரதேச செயலாளர்,
ஹல்தும்முல்ல.

பிரதேச செயலகம்,
ஹல்தும்முல்ல,
2025, செத்தெம்பர் 22.

EOG 09 - 0236

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.